**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.744/2023**

Deposition of **PW-4/LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அசோக் | **Age** | : | 39/2026 |
| **Father's Name** | : | திரு. ஆலடியான் | **Religion** | : | இந்து |
| **Village** | : | தேனி | **Calling** | : | காவல் ஆய்வாளர் |
| **Taluk** | : | தேனி | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02/07/2026.**

1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகளுக்கு குவிமுச 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தற்போது அல்லி நகரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.3.2023 ஆம் தேதி போடி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனக்கு முன்பாக பணியில் இருந்த சார்பு ஆய்வாளர் மணிகண்டன் பதிவு செய்த போடி நகர் காவல் நிலைய குற்ற எண்.51/2023 தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் (தடைச்சட்டம்) 1959 பிரிவு 4A(1b)ன் கீழ் வழக்கு பதிவு செய்திருந்த வழக்கு கோப்பினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2) சாட்சிகள் வீரமுத்து, பால்பாண்டி ஆகியோர்களை விசாரித்து சார்பு ஆய்வாளரிடம் சொன்ன விவரங்களையே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேற்கண்ட வழக்கில் புலன் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கையில் பெயர் பதிவு செய்யப்பட்ட எதிரிகளில் நீக்கம் செய்யப்பட்ட தர்மர் என்ற எதிரியைத் தவிர மற்ற எதிரிகளான மணி,

பெரியசாமி, எஸ் வி எஸ் ஞானவேல், நிவேந்திரன் என்ற நிவேதன் ஆகியோரை நிலையத்தில் வைத்து காலை 10 மணிக்கு ஆஜரானவர்களை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன்.

3) மேலும் வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து 29.3.2023 ஆம் தேதி தமிழ்நாடு திறந்தவெளி அழகை சீர்குலைத்தல் (தடைச்சட்டம்) 1959 பிரிவு 4A(1b)ன் கீழ் குற்றம் என இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4) இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் தகவல் எதுவும் கிடைக்கவில்லை காவலர்கள் ரோந்து சென்றபோது நடைபெற்ற சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. சார்பு ஆய்வாளர் ரோந்து பணிக்காக எங்களது காவல் நிலையத்திலிருந்து எப்போது சென்றார் என்றால் சம்பவ இடத்தில் 9 மணிக்கு இருந்துள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

5) காலை 9 மணிக்கு சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தில் இருந்துள்ளார் என்றால் சரிதான் காலை 10 மணிக்குதான் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான் ஒரு மணி நேரம் கால தாமதமாக தகவல் கிடைத்ததற்கு ஆவணங்களில் விளக்கம் உள்ளதா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை காலம் நான்கில் ரோந்து பணியின்போது சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6) முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அ.ம.மு.க கட்சியைச் சேர்ந்த மற்றும் சிலர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த மற்றும் சிலர் இந்த வழக்கில் ஏன் சேர்க்கப்படவில்லை என்பதற்கு இந்த வழக்கில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சிகளை நான்

விசாரித்தபோது ஏன் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்பதற்கு விளக்கம் உள்ளதா என்றால் சார்பு ஆய்வாளரிடம் சொன்ன விபரங்களையே என்னிடமும் சொன்னதால் நான் பதிவு செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளேன்.

7) சம்பவ இடம் ஆட்கள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தேவர் சிலை அருகே பேருந்து நிலையம் சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் கடைகள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடம் தேவர் சிலை அருகே எந்த இடத்தில் என குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தேவர் சிலை அருகே பின்புறம் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய புறக்காவல் நிலையம் உள்ளது என்றால் சரியல்ல.

8) தேவர் சிலை அருகே கடை வைத்துள்ள நபர்களில் யாரையாவது இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டதாக சொல்லப்படும் பேனர் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த பேனர் எந்த கடையில் யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விபரம் வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

9) இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகள் நால்வரும் ஒரு கட்சியில் பொறுப்பில் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பேனரில் எத்தனை நபர்களின் புகைப்படம் இருந்தது என்ற விபரத்தை இந்த வழக்கில் குறிப்பிட்டுச் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. பேனர் வைக்கப்பட்டதாக சொல்லப்படும் இடம் அரசுக்கு சொந்தமான இடமா அல்லது தனி நபருக்கு சொந்தமான இடமா என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10) நான் சாட்சிகளை விசாரிக்காமலும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமலும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்ட

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.02 19:12:38 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**